*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **25 செப்டம்பர் 2023**

## பத்திரிகை செய்தி

மத்திய சுகாதார அமைச்சகத்தின் சார்பில் நாடு முழுவதும் 'சேவைக் திருவிழா" ("சேவா பக்வாடா") 17-09-2023- முதல் 02-10-2023 வரை கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் வகையில் உறுப்பு தான பெருவிழா ("அங்கதான் மகோத்சவ்") நாடு முழுவதும் தொடங்கப்பட்டு இருக்கிறது.

அதனை ஒட்டி அரசுத் துறைகள்/அலுவலகங்களில் 'உடல் உறுப்பு தான உறுதிமொழி" எடுக்க அறிவுறுத்தி புதுச்சேரி அரசு நிர்வாகச் சீர்த்திருத்தத்துறை சுற்றறிக்கை அனுப்பி இருந்தது. அதனடிப்படையில் துணைநிலை ஆளுநரின் செயலர் திரு. அபிஜித் விஜய் சௌதரி தலைமையில், துணைநிலை ஆளுநர் மாளிகை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உடல் உறுப்பு தான உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். துணைநிலை ஆளுநரின் தனிச் செயலர் திரு மாணிக்கதீபன் உடனிருந்தார்.